# மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்
# கொழும்பு பல்கலைக்கழகம்

# வெற்றிடங்கள்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிக்காக தகைமைகளை பூர்த்திசெய்த தனிநபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிக்கான விண்ணப்பத்தை 2025.06.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு சிரேஷ்ட உதவி பதிவாளர்/ ஸ்தாபனங்கள் மற்றும் பொது நிர்வாகம், மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம், இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது recruitment@pgim.cmb.ac.lk என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் subject பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடவும்.

விண்ணப்பப் படிவம் மற்றும் மேலதிக விபரங்களை மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவன இணையதளத்தில் இருந்து (https://pgim.cmb.ac.lk) பெற முடியும். பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மாத்திரமே கருத்திற் கொள்ளப்படும்.

முழுமை பெறாத அல்லது தகைமைகள் மற்றும் அனுபவத்தை உறுதி செய்யும் சான்றிதழ்களின் நிழல் பிரதிகள் உட்பட போதிய விபரங்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தாமதித்து சமர்ப்பிக்கப்படுபவை ஏற்கப்படமாட்டாது என்பதோடு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எந்த ஒரு சூழலிலும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

## 01. தொழில்நுட்ப அதிகாரி பதவி (இயந்திரவியல்) (Gr.III)

**தகைமைகள்:**

(I) க.பொ.த. (உ/த) இல் பௌதீக விஞ்ஞான பிரிவில் ஒரே அமர்வில் மூன்று (3) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

(II) மூன்றாம் நிலைக்கல்வி தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் அல்லது இயந்திர பொறியியல்/ அல்லது அதற்கு இணையான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட N.V.Q. தரம் 5 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது** : 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**தேர்வு** : எழுத்துமூலம் மற்றும்/ அல்லது நடைமுறைச் சோதனை மற்றும் நேர்முகப்பரீட்சை ஒன்று.

**சம்பள அளவு** : (U MT 1 (III)) 2025.01.01 தொடக்கம் 2025.04.01 இன்படி ரூபா 51,095-7x540; 10x640 – 60,575 p.m.

**குறிப்பு** : இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்**
**மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்**
**இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,**
**கொழும்பு - 07**
**05.05.2025**